# புதிதாக குடியேறிய பாடசாலைக்குச் செல்லும் வயதிலுள்ள பிள்ளைகள்

புதிதாக சூரிச்சிலுள்ள ஒரு நகரசபைக்கு வந்த, எல்லாப் பிள்ளைகளுக்கும் மேலும் இளவயதினருக்கும் பாடசாலைக்குச் செல்லும் வயதில், பாடசாலைக்குச் செல்வதற்கான உரிமையும் அதோடு கடமையும் இருக்கிறது. இது பிள்ளை வந்ததிலிருந்து செல்லுபடியாகும் மேலும் இது அதனுடைய தங்கும் அனுமதிக்கான அந்தஸ்தில் (விசா) தங்கியிருக்காது. கட்டாயக் கல்வியில் கின்டர் காடனும் அடங்கும்.

## கட்டாயக் கல்வி

கட்டாயக் கல்வி பதினொரு ஆண்டுகள் ஆகும், ஆகக் கூடியது எப்படியாயினும் ஆரம்பப் பாடசாலை முடியும் வரை. இதை நீங்கள் அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளிலும் பூர்த்தி செய்யலாம். பிள்ளைகளுக்கு, நான்கு வயது முற்றாக முடிவடைந்தபின்°, அடுத்த பாடசாலை தொடங்கும் வருடத்தில் பாடசாலைக்குப் போக ஆரம்பிக்கும் வயது அதோடு கின்டர் காடனுக்குப் போகலாம்.
எல்லோருக்கும் பொதுவான அரசாங்க ஆரம்பப் பாடசாலையில் நீங்கள் விரும்பியபடி பள்ளிக்கூடத்தை தேர்ந்தெடுக்க முடியாது: பிள்ளைகள் எங்கே வசிக்கிறார்களோ, அங்கே பாடசாலைக்குப் போக வேண்டும். வசிக்கும் இடத்திலுள்ள பாடசாலை நிர்வாக சபை பிள்ளைகளை ஒவ்வொரு பாடசாலைக்குப் பிரிப்பார்கள். பெற்றோர்கள் ஒரு தனியார் பாடசாலைக்கு அனுப்புவதை தங்களுடைய விருப்பப்படி தெரிவுசெய்யலாம்.

## பிள்ளைகளை பதிவு செய்வது

எப்போ ஒரு பிள்ளை புதிதாக சூரிச்சிலுள்ள ஒரு நகரசபையின் கீழ் வசிக்க வந்ததோ, அப்போ அதை கட்டாயம் பெற்றோர்கள் உடனடியாக வசிக்கும் இடத்திலுள்ள பாடசாலை நிர்வாக சபையில் பதிவு செய்ய வேண்டும். பாடசாலைக்கு செல்லும் வயதிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அதோடு இளவளதினருக்கும் இந்தக் கடமை இருக்கிறது.
ஒரு குடும்பம் சூரிச் மாநிலத்தில் வசிக்க வந்தவுடன், பெற்றோர்கள் இயலுமான அளவு கெதியாக பாடசாலை நிர்வாகத்தினரை தொடர்பு

Bildungsdirektion Kanton Zürich
Volksschulamt
Pädagogisches
www.volksschulamt.zh.ch

Sektor Interkulturelle Pädagogik
Walchestrasse 21, Postfach
8090 Zürich

ikp@vsa.zh.ch
043 259 53 61

கொண்டு, அவர்களினுடைய பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதைப் பற்றி பேசி மேலும் அதற்கான கேள்விகளையும் தெளிவுபடுத்துவது முக்கியம். வசிப்பிடத்திலுள்ள பாடசாலை நிர்வாக சபையின் விலாசங்களை நகரசபைகள் அதோடு பாடசாலைகளுக்கான இணையத்தளப் பக்கத்தில் (இன்ரனெற் பக்கத்தில்) காணலாம். www.vsa.zh.ch/schulen

----------------------------------------

° பிள்ளையை பள்ளிக்கூடம் அனுப்புவதற்கான காலக்கெடு (பதிவுக்கான முடிவுத்தகதி)

| *Schuljahr* | *Stichtag* |
|---|---|
| 2013/14 | **30. April** |
| 2014/15 | **15. Mai** |
| 2015/16 | **31. Mai** |
| 2016/17 | **15. Juni** |
| 2017/18 | **30. Juni** |
| 2018/19 | **15. Juli** |
| ab 2019/20 | **31. Juli** |

## பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவது

பாடசாலை நிர்வாக சபையினர் பிள்ளையை ஒரு பாடசாலைக்கு அனுப்புவார். பாடசாலைத் தலைவர் ஒரு பொருத்தமான வகுப்பிற்கு பிரிப்பதற்கு பொறுப்பு. வகுப்பு அனேகமாக அந்தப் பிள்ளையின் வயதிற்கு ஏற்ப இருக்கும். ஒரு பிள்ளைக்கு ஒரு டொச்சும் பேசத் தெரியாவிட்டால் அல்லது கொஞ்ச டொச் பேசினால், அது – வழக்கமான பாடங்களோடு மேலதிகமாக- இரண்டாவது பாஷையான டொச் வகுப்பிற்கு போகும். வழக்கமான வகுப்பு ஆசிரியர் பிள்ளைக்கு அங்கு, அதை மற்றவர்களுடன்

**ஒன்று சேர்ப்பதற்கும் அதோடு வகுப்பு பாடங்களை செய்து முடிப்பதற்கும் உதவுவார்.**

**நகரங்களில் “புதிதாக வந்தவர்களை வைத்திருக்கும் வகுப்புக்கள்” இருக்கின்றன. இங்கே பிள்ளைகளை வழக்கமாக ஆகக்கூட ஒரு வருஷம், டொச் பாஷையை பழகுவதற்கும் அதோடு ஒரு வழக்கமான வகுப்பிற்கு போவதற்கும் தயார்ப்படுத்துவார்கள்.**

**பிற நாட்டில் இருந்து வந்து குடியேறிய 15 தொடக்கம் 21 வயதுடைய இளவயதினரை வேலையை தெரிவுசெய்யும் பாடசாலைக்கு விஷேஷமாக „பாஷையும் அதோடு மற்றவர்களோடு ஒன்றுசேர்ப்பதற்குமான வேலைக்கு தயார்ப்படுத்தும் வருஷம்“ இற்கு விடுவார்கள். இந்த ஒரு வருட வகுப்பில் இளவயதினர் குறிப்பாக டொச்சைப் பழகுவார்கள். அதோடு அவர்கள், மேற்கொண்டு படிப்பதற்காக பாடசாலைக்கு போவதற்கு அல்லது ஒரு வேலைக்கான பயிற்சியை செய்வதற்கு தேவையான அறிவைப் பெறுவார்கள்.**
www.mba.zh.ch -> Berufsvorbereitungsjahre.

## பெற்றோர்களுக்கான மேலதிக தகவல்கள்

**„சூரிச் மாநிலத்திலுள்ள பாடசாலை“ ஐப் பற்றி 11 பாஷைகளில் ஒரு** DVD **பெற்றோர்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்கிறது.**
www.vsa.zh.ch -> DVD Volksschule

**மேலதிக தகவல்கள் - டொச்சிலும் மேலும் வேறு பாஷைகளிலும் -** Volksschulamt **இன் இணையத்தளப் பக்கத்தில் இருந்து நகல் எடுத்துக் கொள்ளலாம்.**

www.vsa.zh.ch -> international